Registered as a Newspaper

விற்பனையாகிறது!
படிமுறைக் கணிதப் பயிற்சி
7 ஆம் வருடம்
இரண்டாம் தவணை
விலை: ரூபா 7-50
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

உதயன்

விலை ரூ.1/=

வெளிவந்துவிட்டது!
படிமுறைக் கணிதப் பயிற்சி
7 ஆம் வருடம்
இரண்டாம் தவணை
ஆலோசனை:
வி. ச. சுப்பிரமணியம்
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

கடல்:- 1 யாழ்ப்பாணம் அகஷய ஆடி வித்திரை மீ 16 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வால் பிறை 19 (29-04-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:137

ராஜீவ் -- சிதம்பரம் இறுதிக்கட்ட ஆலோசனை

திட்டவட்டமான கருத்தை பெறுமாறு அறிவுறுத்து

புதுடில்லி, ஏப். 29

இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக இலங்கையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்குச் செல்லும் தூதுக் குழுவின் தலைவர் திரு பி. சிதம்பரத்துக்கு உயர்மட்டத் திலான நேற்று இறுதிக்கட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இலங்கை அரசாங்கத்திடம் இருந்து திட்டவட்டமான கருத்தை எழுதித் தர வேண்டும் என்று அவருக்கு அறிவுறுத்தப்பட்டதாக அறிய வந்துள்ளது.

திரு. சிதம்பரம் நேற்றுப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, பாதுகாப்பு சபையின் தலைவர் திரு ஜி. பார்த்தசாரதி, வெளியுறவுச் செயலாளர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

இன்று இலங்கை செல்லும் இந்தியக் குழுவுக்கு இறுதி நேர அறிவுரைகள் வழங்கப்பட்டன.

சிதம்பரம்

இதற்குமுன்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை, திரு ஜி. பார்த்தசாரதியின் தலைமையில் வெளியுறவு ஆலோசனைக் குழுவின் முக்கிய கூட்டம் ஒன்று நடைபெற்றது.

பிரதிநிதிகள் கூட்டத்தைத் தொடர்ந்து இலங்கை அரசுத் தலைவர்களுடன் எந்த அடிப்படையில் பேச்சுக்களை நடத்த வேண்டும், திட்டவட்டமான முறையில் அவர்களின் கருத்துக்களைப் பெற வேண்டும் என்பதுபற்றி இன்று அமைச்சர் திரு பி சிதம்பரம் தலைமையிலான இந்தியக் குழுவுக்கு இறுதி நேர அறிவுறுத்தல்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

நம்பிக்கை இல்லை என்கிறார் அமிர்

சென்னை, ஏப்ரல் 28

இந்தியக்குழு இலங்கையில் நடக்கும் பேச்சுக்கள் பலன் அளிக்கும் என்று நாம் நம்பவில்லை

புதுடில்லியில் இருந்து சென்னை திரும்பிய பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது;-

திரு. ஜெயவர்த்தனாவினால் பல தடவை தமிழர் ஏமாற்றப்பட்டனர். நாளை முன்வின்றுகொண்டு வந்த சகரசத் திட்டங்களையும் திரு. ஜெயவர்த்தனாவே வாபஸ் வாங்கிய சம்பவங்களும் உள்ளன.

பேச்சுக்கள் முடிவடையும் முன்னரே, பேச்சுக்களின் எதிர்காலம் பற்றி நான் நிர்ணயிக்க விரும்பவில்லை.

தமிழருக்கு இந்திய அரசு எப்படியும் ஒரு தீர்வைக்காணும் என்ற நம்பிக்கை கூட்டணிக்கு உண்டு.

எமது அடிப்படைநிலை வடக்கு-கிழக்கு இணைந்த மாநில அமைப்பே. இதனை நாம் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் தெளிவாகக் கூறிவிட்டோம்.

இப்படி திரு. அமிர்தலிங்கம் சொன்னார்.

யாழ் 3 ஆம் குறுக்கு தெருவில் கொள்ளை

கண்டுக்குளி, ஏப் 29

யாழ்ப்பாணம் 3ம் குறுக்குத் தெருவில் உள்ள திரு. எம். கனகலிங்கம் என்பவருடைய வீட்டில் பெறுமதியான பல பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

கடந்த சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் பயங்கர ஆயுதங்களுடன் புகுந்த இனம் தெரியாத நபர்கள் இக்கொள்ளையை நடத்தினர்.

இந்த வீட்டில் இருந்த தொலைக்காட்சிப்பெட்டி, வானொலிப்பெட்டி, கைக்கடிகாரங்கள், நகைகள், பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்டன

காங்கேசன் காரைநகர் கடலில் கப்பல்கள்

காங்கேசன்துறை கடலிலும் காரைநகர் கடலிலும் ஞாயிறு நள்ளிரவு இரண்டு கப்பல்கள் காணப்பட்டன.

அக்கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் வேளையில் கடற்படை படகுகள் கறுப்புப்பாக ஈடுபட்டிருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது

வயிற்றோட்டம் 9 பேர் மரணம்

மாத்தளை மாவட்டத்தில் பரவியுள்ள வயிற்றோட்டநோய் காரணமாக இதுவரை ஒன்பது பேர் இறந்துள்ளனர்.

மற்றும் ஒரு பவுசர் தீப்பிடித்தது!

யாழ்ப்பாணம், ஏப் 29

கோகாலை மாவட்டத்திலுள்ள புளத்கோபிட்டிய என்னுமிடத்தில் நேற்று பெற்றோல் பவுசர் ஒன்று வெடித்து தீப்பற்றி எரிந்தது.

பெற்றோல் நிலையம் ஒன்றில் பெற்றோல் திரப்பிக் கொண்டிருந்தபோதே பவுசர் திடீரென வெடித்து தீப்பற்றிக்கொண்டது.

பெற்றோல் தீப்பற்றி ஏனைய பகுதிகளுக்கு பரவாமல் தடுப்பதற்காக சாரதி பவுசரை நகர்த்தியபோது அருகிலுள்ள இருகடைகள் தீப்பிடித்தன.

தீப்பிடித்த பவுசருக்குள் குண்டு இருந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது!

போராளிகளுக்கு குடாநாடெங்கும் வீர அஞ்சலி!

யாழ்நகரில் பூரண ஹர்த்தால்; வீதிகள், வாகனங்களில் கறுப்புக் கொடிகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

இம்மாதம் 24ஆம் திகதி உயிர்நீத்த தமிழ்ஈழ விடுதலை இயக்கப் போராளிகளுக்கும், இம்மாதம் 27ஆம் திகதி உயிர் நீத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கும் நேற்றுக் குடாநாடு எங்கணும் வீர அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்நகரில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. நகரெங்கும் பிரதான வீதிகள், ஒழுங்கைகள், குச்சு ஒழுங்கைகள் எல்லாம் காழை மரங்கள், தோரணங்கள் கட்டப்பட்டு, கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. கறுப்புக் கொடிகளில் 'வீர அஞ்சலி, என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது.

நகரில் மட்டுமல்லாமல் கிராமப் பகுதிகளிலும் போராளிகளுக்கு வீர அஞ்சலி செலுத்தப்பட்டது

யாழ்நகரத்தில் மத்திய நண்பகல் நாலு குண்டு வெடிப்பு சத்தங்கள் கேட்டன. நகரத்திற் சனநடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது.

மறைந்த போராளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு மோதலில் சார்ஜண்ட் ஒருவர் பலி!

இருவர் காயம்

– மட்டக்களப்பு செய்தியாளர் இரா உதயகுமார் –

மட்டக்களப்பு, ஏப் 29

போராளிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையில் நேற்று மட்டக்களப்பில் நடந்த சண்டையில், சார்ஜண்ட் ஒருவர் கொல்லப்பட்டார். இரு சிப்பாய்கள் காயம் அடைந்தனர்

சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது:-

களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமைச் சேர்ந்த ரோந்திப்படைச் சிப்பாய்கள் நேற்று போராளிகளுக்கு—அம்பிளாந்துறை வீதியில் உள்ள கழுவாமம் என்னும் இடத்தை நோக்கி வந்தனர்.

பட்டிருப்பு பாலம் தகர்க்கப்பட்டிருந்ததாகச் சிப்பாய்கள் 8 மைல்

(4ஆம் பக்கம் பார்க்க)

★ சுஹாசினி சிறந்த நடிகை

புதுடில்லி, ஏப் 28

1985 ஆம் ஆண்டின் அகில இந்திய சிறந்த நடிகையாக சுஹாசினியும், சிறந்த நடிகராக சசிபூரும், சிறந்த குழந்தைநட்சத்திரமாக கமலித்தும், சிறந்த தமிழ் நடிகையாக விஜயா மேத்தாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

சிறந்த கதைப் படமாக மலையாளத் திரைப்படம் 'சிதம்பரம்' தெரிவு செய்

(4ஆம் பக்கம் பார்க்க)

வர்த்தகர் சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப். 29

கடத்தப்பட்ட நான்கு வர்த்தகசங்க உறுப்பினர்களையும் விடுவிக்கும்படி யாழ்ப்பாணம் வர்த்தகர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 34 பேரும் பலாலியில்

யாழ்ப்பாணம், ஏப் 29

இலங்கைப்பிலிருந்து அகதிகளாக படகில் இந்தியா நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் பலாலி இராணுவ முகாமில் ஒப்படைக்கப்பட்டனர்.

34 பேரும் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

அந்தோனிப்பிள்ளை மரியதாஸ், முகமது ஹனீபா நவாஸ் ஏபிரகாம் எட்வேட், நாகையா ஜெயகுமாரன், குழந்தை புஷ்பராஜா, சுவரிமுத்து அன்ரன் ஜெயந்தராஜா, ஐயாத்துரை சாந்தகுமார், இராமலிங்கம் தேவராசா, கார்த்திகேசு வின்வலிங்கம், கந்தையாதம்பிராஜா, முத்தையா சாந்தகுமார், கப்பிரமணியம் நவரத்தினம், ஆனந்தராஜா பத்மகுமார், தங்கராஜா மகேந்திரன், வைத்திலிங்கம் பஞ்சலிங்கம், மாரிமுத்து செல்வம், மகாலிங்கம் சுந்தரம், அப்பாத்துரை கிருஷ்ணராஜா, நல்லையா இராஜேஸ்வரன், கந்தசாமி சிறிஸ்கந்தராஜா, பொன்னுத்துரை சிறிதரன், வைரத்தினம் ராமதாஸ், இராசா தேவானந்தன், விக்கிளி பிறிக்கொன், நமசிவாயம் ரவீந்திரகுமார், வரத

(4 ஆம் பக்கம் பார்க்க)

ராஜீவ்

தலைமன்னார் கடலில் நடந்த நேரடி மோதல்

யாழ்ப்பாணம், ஏப். 29

தலைமன்னார் கடலில் நேரடி மோதல்.

ரோந்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்படை யினருக்கும் எதிர்திசையில் இருந்து வந்த 2 படகுகளில் இருந்தவர்களுக்கும் இடையே இம் மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலில் இரு பக்கத்திலும் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

அதிகாலை 2.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

தலைமன்னாரை நோக்கி வந்து கொண்டிருந்த 2 படகுகள் ரோந்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்படை படகுகளை நேருக்கு நேர் சந்திக்கத் தொடர்ந்தே இம் மோதல் ஏற்பட்டது

பின்னர் மேலும் இரண்டு படகுகள் அந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பில் ஹெலிக்கொப்டரில் வந்து முகாமுக்குள் இறங்கினார் அமைச்சர் தேவநாயகம்!

மட்டக்களப்பு ஏப். 29

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு கே. டபிள்யூ. தேவநாயகம் நேற்று மட்டக்களப்புக்கு விசேஷ ஹெலிக்கொப்டரில் வந்தார்.

திரு. தேவநாயகத்திற் மனைவியின் காணி ஒன்று மோசடி செய்யப்பட்ட தாகக் கூறப்படும் வழக்கு ஒன்று நேற்று மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதில் சாட்சியம் அளிப்பதற்காகவே அமைச்சர் கொழும்பிலிருந்து ஹெலிக்கொப்டரில் மட்டக்களப்பு வந்தார்.

அமைச்சரின் ஹெலிக்கொப்டர் நேரடியாக கல்லடி ஆயுதப்படை முகாமில் வந்து இறங்கியது. முகாமில் இருந்த அமைச்சர் 15 வாகனங்களின்பாதுகாப்புடன் மட்டக்களப்பு நீதிமன்றத்துக்கு வந்து சாட்சியம் அளித்த பின் அதே பாதுகாப்புடன் கல்லடி இராணுவமுகாம் திரும்பினார்.

கபநேரம்

29-4-1986

செவ்வாய்க்கிழமை

கபநேரம்:

10.28 முதல் 11.58 வரை

ராகுகாலம்:

2.58 முதல் 4.28 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் வேறுபடும்

நம்பிக்கை இல்லை என்கிறார் அமிர்

யாழ் 3 ஆம் குறுக்கு தெருவில் கொள்ளை

மத வழிபாட்டுச் சுதந்திரத்தை உறுதிப்படுத்த அவசர நடவடிக்கை தேவை

யாழ்ப்பாணம், ஏப் 29

மதவழிபாட்டுச் சுதந்திரத்தை உறுதிப்படுத்த தேவையான அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

அகில இலங்கை இந்து ஆலய பாதுகாப்புக்குழு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரைச் சந்தித்து இப்படி கேட்டுக் கொண்டது

நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் பாதுகாப்புக் குழுவின் தூதுக் கோஷ்டி, நேற்று யாழ். அரசாங்க அதிபர் திரு. வி. எம் பஞ்சலிங்கத்தைச் சந்தித்தது.

இச்சந்திப்பு யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த தூதுக் குழுவினர் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் அரச அதிபரிடம் கையளித்தது.

* ஆயுதப்படை முகாம்களுக்கு அருகில் உள்ள இந்து ஆலயங்கள் செயல்பட முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. வருடாந்த உற்சவங்களை நடத்த முடியாமல் உள்ளது.

* ஆலயங்களின் புனிதம் பாதிக்கப்பட்டுள்ளது நித்திய பூசைகளை நடத்த முடியாத நிலைமையும் சில ஆலயங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

* ஆலயங்களை நம்பி கற்றுப் புறங்களில் தொழில் செய்பவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்

* பாதிக்கப்பட்டு, இயங்காமல் இருக்கும் ஆலயங்கள் பற்றிய புள்ளி விவரங்களை உதவி அரசாங்க அதிபர் ஊடாகச் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

* மத வழிபாட்டுச் சுதந்திரத்தை நிலைநாட்ட தேவையான நடவடிக்கைகளை மேலிடத்துடன் தொடர்பு கொண்டு அரச அதிபர் எடுக்க வேண்டும்.

இப்படி மகஜரில் கோரப்பட்டுள்ளது.

இந்து ஆலய பாதுகாப்புக்குழு அரச அதிபரிடம் வலியுறுத்தது

இளைய தலைமுறையின் [illegible] இன்றைய நாளிதழ்
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியில் பாதிப்புற்றோருக்கு நிவாரணம்

அரச அதிபர் முயற்சி

கிளிநொச்சி, ஏப் 29

கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினால பாதிக்கப்பட்டவர்களுக்குத் தகுந்த நிவாரணம் பெற்றுக் கொடுக்க கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. என். தெய்வநாதன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இராணுவ நடவடிக்கைகளினால உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக் —

அதாவது காயமடைந்து பாதிப்படைந்தவர்களுக்கு அந்தப் பகுதி பிரசைகள் குழுவின் ஊடாக முடிந்தளவு நிவாரணம் பெற்றுக் கொடுக்க அவர் முயற்சி எடுத்து வருகிறார்.

ஆதலால் இப்பகுதியில் பாதிக்கப்பட்டவர்கள் அது குறித்து நமது பகுதி பிரசைகள் குழுவினருக்கு தகவல் தெரிவிக்குமாறும் —

அவற்றை பிரசைகள் குழுவின் செயலாளர் உரிய காலத்தில் அரச அதிபருக்கு கையளிக்குமாறும் கேட்கப்பட்டிருக்கிறது.

சந்தையில் விலை வீழ்ச்சி

உருத்திரபுரம், ஏப். 29

கடந்த ஒருமாத காலமாக கிளிநொச்சி சந்தையில் பொருள் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதை காணக் கூடியதாக இருக்கிறது.

பெற்றவரி மாதத்தில் ஒரு தேங்காய் இரண்டு ரூபாவரை விற்பனையானது. ஒரு கிலோ அரிசி ஏழு ரூபாவுக்கு மேல் விற்பனையானது. சந்தரிக்காயின் விலை ஒரு கிலோ ஆறு ரூபாவுக்கும் பயித்தங்காய் ஒரு கிலோ ஆறு ரூபாவிற்கும் விற்பனையானது.

தற்போது இப்பொருள்களின் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கந்தபுராண விரிவுரை

உடுப்பிட்டி, ஏப். 29

அல்வாய் வடக்கு நாவலடி முருகன் கோவிலில் கந்தபுராண விரிவுரை நடைபெற்று வருகின்றது.

கடந்த பங்குனி உத்தர தினத்தன்று இவ்விரிவுரை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று எதிர்வரும் வைகாசி விசாக தினத்தன்று முடிவடையும்.

அன்றைய தினம் விசேட பூஜை வழிபாடுகளும் நடைபெறும்.

யாழ்- மட்டக்களப்பு பஸ் பயணிகள் அவலம்

மட்டக்களப்பு, ஏப் 29

மட்டக்களப்பு – யாழ்ப்பாணம் இ. போ. ச. பஸ் சேவையில் ஏற்படுகின்ற தாமதத்தினால் மட்டக்களப்பு செல்லுமடையும் பயணிகள் பலவேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக புகார் செய்யப்படுகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் பஸ் தினமும் இரவு நேரங்களில் தான் மட்டக்களப்பு வந்தடைகிறது

பஸ் நிலையம் செல்லாமல் ரயில் நிலையச்சந்தி அல்லது அரசடிச்சந்தியில் பயணிகளை இறக்கிவிட்டு பஸ் டிப்போ திரும்பி விடுகின்றது.

இப் பயணிகளில் ஒரு சாராரர் உறவினர்களோ, அறிமுகமானவர்களோ அக் சுற்றுமுடலில் இல்லாத நிலையில் நடுத்தெருவில் தவிக்கவேண்டிய நிலையை எதிர்நோக்குகிறார்கள்.

யாழ்ப்பாண டிப்போவில் பயணிகள் தங்குவதற்கு அனுமதி உண்டு.

ஆனால் மட்டக்களப்பு டிப்போவில் அனுமதி இல்லை. இதனால்தான் பயணிகள் பாதிக்கப்படுகிறார்கள்.

இந் நிலையில் இவ்விடயத்தில் இ. போ. ச. அதிகாரிகள் கவனம் செலுத்தி மட்டக்களப்பு டிப்போவிலும் பயணிகள் தங்குவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என கோரப்படுகிறது.

மக்கள் முகம்

இப்படி ஒரு நம்பிக்கை

இயக்குநர் சோமுவுக்கு

தெய்வ சங்கல்பம், உயிர், எங்கள் குல தெய்வம் போன்ற படங்களையும், அழைத்தால் வருவேன் போன்ற நியூவேவ் கதைகளையும் திரையுலகிற்குக் கொடுத்தவர் பி ஆர். சோமு

இப்போது இவர் பி. ஆர். சோமசுந்தரம் என்ற பெயரில் படங்களை இயக்குகிறார். கலைஞியாக இயக்கிய படம் 'சரிவம் சக்திமயம்'.

இவரது உயிர் படம் வெளிவந்த போது எடிட்டர் வெங்கிராம் சாமியும் செமராமேன் பாபுவும் தமிழ்த் திரையுலகிற்கு அறிமுகமானார்கள்.

பல படங்களை இயக்கி, நிறைக்கதை, வசனம் எழுதியும் கூட இவர் இன்னும் நிரந்தரமான பெயர் பெறாமலேயே இருக்கிறார்.

அதற்கான காரணத்தை அவர் கூறுகிறார்.

"நான் எத்தனையோ படங்களை இயக்கியும் கதை வசனம் எழுதியும் இன்னும் திரையுலகில் நிரந்தரமான ஓர் இடத்தைப் பெற முடியாமல் தான் இருக்கிறேன். அதற்கு எனது நேரம் தான் காரணம்.

எத்தனை நல்ல படம் செய்தாலும் சரி நேரம் நன்றாக அமைய வேண்டும் அதாவது அதிஷ்டம் இருக்க வேண்டும். அந்த அதிஷ்டத்தை இப்போது பப்பிளிட்டி மூலம் கூடவே வைத்திருக்கிறார்கள்.

என் காலத்தில் டைரக்டரின் பெயர் தான் மக்களுக்குத் தெரியுமே ஒழிய, ஆளைத் தெரியாது. ஒரு நடிகரைப் பொறுத்துதான் அப்போது படமே ஓடும்.

எனக்கு அதிஷ்டத்தில் தான் நம்பிக்கை. எனது திறமையில் எனக்கு நம்பிக்கை இல்லை.

ஏனெனில் எதையுமே நம்மால் கணிக்க முடியாது நமக்கு மேல் ஒரு சக்தி. அது கைகூடி நமக்கு சாதகமாவதுதான் அதிஷ்டம்.

நல்ல படங்களை எடுத்த எல்லோருமே பெயர் வாங்குவது இல்லை. சாதாரண மசாலாப் படம் ஓகோ என்று ஓடி விட்டால் அந்த மசாலாப் படடைரக்டர் தான் சிறந்தவர் என்று சொல்ல முடியாது. அந்த டைரக்டருக்கு அதிஷ்டம் வேலை செய்கிறது என்று தான் சொல்ல வேண்டும்.

அந்த அதிஷ்டத்தை எதிர்பார்த்து படங்களை இயக்கிக் கொண்டிருக்கிறேன். அந்த சக்தி- அந்த அதிஷ்ட தேவதை எனக்கு ஒரு நாள் கை கொடுப்பாள் என்ற நம்பிக்கையோடு தான் இருக்கிறேன்" என்றார்.



மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

தமிழர் மீதான வன்செயலை உடனடியாக நிறுத்துங்கள்

அரசாங்கத்திடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 29

தமிழ்ப்பேசும் மக்களுக்கு எதிராக வட, கீழ், மத்திய மாகாணங்களில் கட்டவிழ்த்து விடப்படும் வன்செயலை உடனடியாக நிறுத்தி, இராணுவ நடவடிக்கையைக் கைவிட்டு பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு காண்பது அவசியம்.

தமிழ்ப்பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான கோராட்டத்துக்கான இணைப்புக்குழு இவ்வாறு அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளை ஆளுவது திருத்தம் மூலம் நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றியும்—

தமிழ்இளைஞர்கள் அவசரகால சட்டவிதிகள், பயங்கரவாத தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கைதுசெய்து விசாரணையின்றிச் சிறைவைத்தும்—

தமிழ்ப்பகுதிகளில் இறந்த தமிழ்மக்களை விரட்டியும்—

இனவாதமாக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் கண்டித்து இக்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வீதிகள் திருத்தப்படும்

புங்குடுதீவு, ஏப். 29

புங்குடுதீவில் உள்ள பண்டத்தரிப்பு, கிராஞ்சி வீதி, பாணவிடை வேள் கோவில் வீதி, கந்காடு வீதி, கலட்டி வீதி, ஆகியன இவ்வாண்டில் திருத்தி பலமாக்கப்படவுள்ளன.

இவ்வீதித்திருத்தவேலைகளுக்கான நிதி ஏற்கனவே பன்னாடுவரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அப்பர் சுவாமிகள் குருபூசை

புங்குடுதீவு, ஏப். 29

புங்குடுதீவு பாணவிடை வேள் ஆலயத்தில் கடந்த 74 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் அப்பர் சுவாமிகளின் குருபூசை விழா அடுத்த மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் வெகு சிறப்பாக நடைபெறும்.

இதனையொட்டி, ஆலயதினம் ஆலய முற்றலில் ஆயிரக்கணக்கானோருக்கு அன்னதானம் வழங்கப்பட இருக்கிறது. ஆலய பரிபாலனசபையினர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

பிரசைகள் குழு

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ். பிரசைகள் குழுவின் புதிய செயலாளராக முன்னாள் அரச சட்டத்தரணி திரு. கே. பி. அரசிந்தன் சென்ற வியாழன் நடைபெற்ற பிரசைகள் குழுக் கூட்டத்தில் தெரிவானார்.

தெரிவான நடப்பு வருட நிர்வாகிகள் பின் வருமாறு:-

தலைவர்: எஸ். அருமை நாயகம்

பொருளாளர்:- ஆர். ஜே குணரட்னம்

உபதலைவர்கள்; முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி வே. வி. ஆரிராஜாவும், வைத்தியகலாநிதி ஜெகராசபதி, அருட் திரு. மைக்கலாமி, ஆர். பாலசுப்பிரமணியம், கே. விஸ்வலிங்கம்

ஜேர்மன் அதிபர் இந்தியாவில்

புதுடில்லி, ஏப்ரல் 28

மேற்கு ஜேர்மன் பிரதமர் ஹெல்மெட் கோல் நாளைஞாயி விஜய மொன்றை மேற்கொண்டு, இன்று இந்தியா வந்து சேர்ந்துள்ளார்.

இவர் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவார். அப்பேச்சுவார்த்தைகளின் போது ஜேர்மனியிலிருக்கும் சீக்கிய தீவிரவாதிகள் பற்றியும் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்துவாலிபர் சங்கம்

யாழ்ப்பாணம், ஏப் 29

ஆனைந்தலங்கை இந்துவாலிபர் சங்கத்தின் நடப்பாண்டு உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

காப்பாளர்கள்:

1 நல்லை ஆதீனம் சோமசுந்தரத்தம்பிரான்.

2. மட்டுநகர் இராமகிருஷ்ண சங்க சுவாமி ஜீவானந்தா.

3. முன்னேஸ்வரம் இராஜன் கைலாசநாதக் குருக்கள்.

4. திருக்கோணேஸ்வர சபைத் தலைவர் திரு. மு. கோ. செல்வராசா.

5. எதிர்காலம் திரு. பி. கணநாதன்.

தலைவர்; சட்டத்தரணி க. ஜெயகுமார்.

துணைத்தலைவர்கள்:

வீர. வேலாயுதன், மா. செ. சுப்பையா, சி. தெய்வநாயகம், எஸ். சதாசிவம், ந. பொன்னையா.

பொதுச்செயலாளர்:

ந. மனோகரன்.

துணைச்செயலாளர்:

எஸ். நாகேந்திரன்.

பொருளாளர்:

நா. மகாதேவன்.

துணைப்பொருளாளர்:

சே. இராஜசேகர்.

இருபத்தேழு பேர் கொண்ட செயலவையும் தெரிவு செய்யப்பட்டது

ஆலயங்களுக்கு அழிவு:

வாலிபர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப்.29

அனைமக்காலமாக இந்து ஆலயங்கள் தாக்கப்பட்டு, நகரக்கப்பட்டும், விக்கிரகங்கள் அப்புறப்படுத்தப்பட்டும், கொள்ளையடிக்கப்பட்டும் வருவதை அனைத்து எங்கை இந்து வாலிபர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது:

'நாகரிக சமுதாயம் வெட்கித் தலைகுனியுமளவு அநாகரீகச் செயல்களின் பட்டியலில் இந்து ஆலயங்கள் பாதிக்கப்படுவதும் இடம்பெற்று விட்டது.

ஆதிமுதல் இந்துக்கள் இயற்கையைத் தெய்வமாகப்போற்றி வணங்குபவர்கள். எதனை யார் தான் அழித்தாலும் இந்துக்களின் வணக்கத்துக்குரிய பஞ்ச பூதங்களை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது

அநாகரீகத்தை அழித்துத் தருமத்தை நிலைநிறுத்த பெற்றோர்களின் பொறுப்பையும் நன்னாளை நோக்கி இந்துக்களாகிய நாம் வழிபடுவோம். பலன் உறுதியாகக் கிடைக்கும் என நம்புவோம்'.

இவ்வாறு அனைத்திலங்கை இந்துவாலிபர்சங்கத்தின் சார்பில் பொதுச் செயலாளர் திரு த மனோகரன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தெல்லிப்பளையில் அவசர சிகிச்சைப் பிரிவு இயங்க முடியாதநிலை

பிராணவாயுக்கு தட்டுப்பாடு

பலாலி, ஏப்ரல் 29

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் பிராணவாயு இன்மையால் அவசர சிகிச்சைப் பிரிவும், சத்திர சிகிச்சைப்பிரிவும் மிகப்பாதிப்படைந்துள்ளன.

அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாகவே இத்தடுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அடிக்கடி ஹேலிக்கொப்டர் தாக்குதல்களினாலும் விபத்துக்களினாலும் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் அதிகளவு நோயாளர்கள் இந்த ஆஸ்பத்திரிக்கு வருகின்றனர். பிராணவாயுத் தட்டுப்பாடினால் இந்த நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

அசெம்பிளி ஒப் கோட்

சபையின் இளைஞர் முகாம்

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ்ப்பாணம் அசெம்பிளி ஒப் கோட் சபையினால் நடத்தப்பட்ட "1986 இளைஞர் முகாம், கடந்த 16 ஆம், 17ஆம்' 18ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பரி யோவான் கல்லூரியில் நடைபெற்றது.

வடமாகாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் 150 வாலிபர்கள் இந்த பாசறையில் கலந்து கொண்டு உற்சாகமாக 3 நாட்களை கழித்தார்கள்.

வேதாகம வகுப்புகள், உரையாடல்கள், கேள்வி-பதில்கள் முதலியன இளைஞர் முகாமில் முக்கிய இடம் வகித்தன.

யாழ். மட்டக்களப்பு மாவட்டங்களிலும்

திறந்தவெளிப் பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சிநெறி நடத்த கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 29

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்களிலும் திறந்த வெளிப் பல்கலைக் கழகம் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியை நடத்த வேண்டும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தலைவர் கலாநிதி ஸ்ரான்லி கல்பேகேயிடம் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிக்கு தற்போது சம்பளத்துடனான லீவு ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

பெருந்தொகையான ஆசிரியர்கள் பட்டப்பின் டிப்ளோமா பயிற்சி நெறியைப் பின்பற்றாத படியினால் சம்பள உயர்சியில் தடை விதிக்கப் பட்டுள்ளது.

பட்டப்பின் டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கு தரவாரத்தினை கமிஷன் சிபார்சுக்கமைவாக விசேஷ சம்பளம் வழங்கப்படுகின்றது.

எனவே யாழ் ஆசிரியர் இப்பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியைப் பின்பற்ற விரும்புகின்றனர்.

ஆனால் திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தினர் இப்பாட நெறியை யாழ்ப்பாணத்திலோ அல்லது மட்டக்களப்பிலோ நடத்துவதில்லை.

தற்போதைய சூழ்நிலை வடக்கு, கிழக்கு ஆசிரியர்கள் கொழும்புக்குச் சென்று பாடநெறியை பின்பற்றக்கூடியதாக இல்லை.

எனவே யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் திறந்தவெளிப் பல்கலைக்கழகம் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியை ஆரம்பிக்க வேண்டும்

இ. த. ஆ. சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மாசிலாமணி கலாநிதி ஸ்ரான்லி கல்பகேக்கு அனுப்பிய மகஜரில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மகஜரின் பிரதி கல்வி சேவை குழுவின் உறுப்பினரும் திறந்தவெளிப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஆ. கந்தையாவுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

பூநகரி ஐயர் வீட்டில் கொள்ளை

பூநகரி, ஏப்ரல் 29

பூநகரியில் கோல்ல குறிச்சி என்னும் இடத்தில் வசிக்கும் பொன்னையா – சிவானந்தசர்மா என்பவரின் வீட்டிற்கு துப்பாக்கி சகிதம் சென்ற நபர் ஒருவர் வீட்டிலிருந்த ரேடியோ. டோர்ச்லைட் என்பவற்றையும் ஐயரின்மகள் கிருஷ்ணபாலின் காதில் இருந்த தோட்டையும் அபகரித்தார்.

சம்பவம் பற்றி கூறப்படுவதாவது;

இரவு 10 மணி அளவில் சென்ற இந்த நபர் துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தி வீட்டுக் காரரை 50 யார் தூரம் வரை அழைத்துச் சென்று தாக்கினார்.

பொருள்களைத் தரமறுத்தால் புத்தூரில் நடந்தது தான் உங்களுக்கும் நடக்கும் என்று கூறி இயக்கம் ஒன்றின் பெயரைச் சொல்லி கோராட்டத்திற்காக நிதிகேறவே இப்படிச் செய்வதாகச் சொன்னாராம்.

ஐயரின் மகளின் காதிலிருந்த தோடுகளையும் பலாத்காரமாக கழற்றி விற்று அபகரித்துக் கொண்டு நபர் தப்பிச் சென்றார்.

நாவலர் வீதியில் பொறியியலாளர் வீட்டில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஏப். 29

கடந்த வெள்ளிக் கிழமை யாழ் நாவலர் வீதியில் உள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் வீட்டில் இனந்தெரியாதவர்கள் ஒரலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளை இட்டனர் என்று கூறப்படுகின்றது

இச்சம்பவம்பற்றி அறியப்படுவதாவது;

கடந்த வெள்ளிக் கிழமை இரவு 10 மணியளவில் வீட்டின் கதவுகளைத் தாண்டிவட்சென்ற இனந் தெரியாதவர்கள் அங்கு வாசலில் படுத்திருந்த வேலைக்காரரைத் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தினர்,

பின்னர் வீட்டு அழைப்பு மணி அடிக்கப் பட்டது.

அச்சமயம் தனிமையில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த இவரி நோச்சி நீர்ப்பாசனப் பொறியியலாளர் தம்பிமுத்து சுப்பிரமணியம் கதவைத் திறந்தாராம்.

இனந்தெரியாதவர்கள் அவரை ஓர் அறையினுள் பூட்டி வைத்து விட்டு, அங்கு இருந்த தொலைக்காட்சிப்பெட்டி, டெக், கைக்கடிகாரம், பணம், இரண்டு வானொலிப்பெட்டிகள் மற்றும் பெறுமதியான பொருள்களைக் கொள்ளை இட்டுச் சென்றதாக அறியப்படுகின்றது.

பொறியியலாளர் சில மாதங்களுக்கு முன்னர் தான் வெளிநாட்டில் இருந்த திரும்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐந்துபேர் கொண்ட கோஷ்டியே இக்கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

நினைவஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப்- 29

வவுனியா மோதலில் வீரமரணம் எய்திய லெப்டினன்ட் இளங்கோ (குமார்)விற்கு நினைவஞ்சலி தெரிவிக்கும் வகையாக ஒட்டப்பட்டுள்ளன.

26-3-86இல் வவுனியாவில் 18 அரச கலிப் படையினரைப் பலிகொண்ட நேரடிமோதலில் தமிழீழ விடுதலை இராணுவ லெப்டினன்ட் இளங்கோ வீரமரணம் எய்தினார்.

தமிழீழ விடுதலை இராணுவம் (ரெலா), வெடுத்துள்ள அறிக்கையில் இது தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எழுத்து பரீட்சை

வல்வெட்டித்துறை, ஏப்ரல் 29

வடஇலங்கைச் சங்கீத சபையினர் அண்மை இலங்கை ரீதியில் நடத்தும் பரதம், கதகளி, பண்ணிசை, மிருதங்கம் நாடகம் ஆகியவற்றுக்கான செயன்முறைப் பரீட்சைகள் இம்மாதம் 18ஆம் திகதிமுதல் நடைபெற்று வருகின்றன.

கோழும்பு, திருகோணமலை,மட்டக்களப்புஆகிய இடங்களிலுள்ள பரீட்சை நிலையங்களிலும் வடமாகாணத்திலுள்ள பரீட்சை நிலையங்களிலும் நடைபெறுகின்ற இப்பரீட்சைக்கு சுமார் ஐயாயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

இப்பரீட்சைகளுக்கான அறிமுறை முடிவுகள் பரீட்சை மேலாதிபதி பத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கூதியம்

கோபம் வரும் போது தன்னைக் கட்டுப்படுத் துதலே பெரிய தெரியசாலி.

பெருமானார் நபி.

உதயன்

இல. 15, 2வது ஒழுங்கை, நல்லூர் தபால் பெட்டி 17, யாழ்ப்பாணம். 29 ஏப்ரல் 86 தொலைபேசி: 24805, 22078, த. பெ. 23

வர்க்க ஒற்றுமை வளர்க

வடக்கு, கிழக்கில் உள்ள கூட்டுத்தாபன, கூட்டுறவு ஊழியர்களின் சேவைப் பிரச்சினைகள், மற்றும் பொதுப் பிரச்சினைகள் தொடர்பாக விசேட நடவடிக்கை எடுப்பதில் ஆர்வமும் அக்கறையும் காட்டப்பட்டிருக்கிறது

திரு வாசுதேவ நாணயக்காரா தலைமையிலான கூட்டுத்தாபன, கூட்டுறவு வர்த்தக ஊழியர் சங்கமே இவ்விடயத்தில் அக்கறை காட்டி இருக்கிறது

தொழிலாளர்கள் வடக்கில் வாழ்ந்தால் என்ன, தெற்கில் வாழ்ந்தால் என்ன தொழிலாளர்கள் தான். அவர்கள் வர்க்க ரீதியாக ஒரே சாரார். ஆகையால் அவர்களின் கஷ்ட நஷ்டங்களை ஒரே நோக்கோடு பார்க்க வேண்டும். அதுவே அரசுகளுக்கும் தொழிலாளர் நலனுக்காகவும் உரிமைக்காகவும் போராடும் தொழிற்சங்கங்களுக்கும் பண்பு.

1958 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையின் தொழிற்சங்கத் துறையிலும் இனவாதம் புகுந்து கொண்டது. மொழிவழித் தொழிற்சங்கங்களும் தோன்றின.

அதன் விளைவாக இப்போது வடக்கு கிழக்கில் உள்ள தொழிலாளர்களில் பெரும்பாலானவர்கள், மொழிவழித் தொழிற்சங்கங்களிலேயே உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றனர்.

தேசிய ரீதியாக இயங்கும் தொழிற்சங்கங்களில் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கும் தமிழ்த் தொழிலாளரின் எண்ணிக்கை மிகவும் குறைவு எனலாம்.

அதனாலோ என்னவோ தமிழ்த் தொழிலாளர், ஊழியர்களின் கஷ்ட நஷ்டங்களை எடுத்துச் சொல்வதில் தேசிய தொழிற்சங்கங்கள் அக்கறை காட்டுவது அருகி வருகிறது.

அத்தகைய ஒரு சூழ்நிலையில் திரு வாசுதேவ நாணயக்காரா தலைமையிலான தொழிற்சங்கம், வடக்கு கிழக்குத் தொழிலாளரின் இன்னல்களை உணர்ந்து அவற்றைக் களைய அக்கறை காட்டுவது பாராட்டத்தக்கது.

தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள தொழிலாளருக்கு விசேட கொடுப்பனவுகள் வழங்குவதற்கும் ஆயுள் பாதுகாப்பு பெற்றுக் கொள்வதற்கும், அரசை நிர்ப்பந்திக்கவும், அதற்காக ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தவும் பிரஸ்தாப தொழிற்சங்கம் முடிவு செய்திருக்கிறது.

அவ்வாறு நடக்கும் பட்சத்தில் தமிழ்த் தொழிலாளர்கள் நன்றி உடையவர்களாக இருப்பர். தமிழ்த் தொழிலாளர்கள் நலனுக்காக, அவர்கள் இல்லாமலே சிங்களத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினால் அது ஒரு சாதனையாகவும் சரித்திர நிகழ்ச்சியாகவும் கொள்ளப்பட வேண்டும்.

தமிழ்ப் பிரதேசங்களான வடக்கிலும், கிழக்கிலும் இப்போது யுத்த நிலைமை. அத்தோடு அரச அடக்கு முறையும் உச்சக் கட்டத்தில் உண்டு.

அதனால் தமிழ்த் தொழிலாளர்கள் — கூட்டுறவு, கூட்டுத்தாபன வர்த்தக ஊழியர்கள் மட்டுமன்றி — அரசாங்க ஊழியர்கள் கூடப் பல கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் உயிராபத்துக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் கடமை புரிந்து வருகிறார்கள். தங்கள் கஷ்டங்களை எடுத்துச் சொல்லி நிவாரணம் பெறவோ, அல்லது வேலைநிறுத்தம் போன்ற போராட்டங்களை நடத்தி நிவாரணம் பெறவோ முடியாத நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அவர்கள் தங்கள் தொழில் உரிமைகளுக்காகவோ சம்பள உயர்வுக்காகவோ அல்லது வேறு வசதிகள் கோரியோ போராட முடியாது. அவ்வாறு செய்ய முற்பட்டால் அவர்களுக்கு வெகுகலபமாக "பயங்கரவாதிகள்" என்ற "பட்டம்" குத்தப்பட்டுவிடும்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் அவர்களுக்காக தெனிலங்கைத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்துவது அரசாங்கத்துக்கு நல்ல பாடமாக அமையும்.

இதே ரீதியில் தமிழ் மக்களின் அரசியல் அடிமை நிலையையும், அவர்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் தெனிலங்கை மக்களுக்கு எடுத்துச் சொல்லி, நீதியான போராட்டங்கள் நடத்துவதற்குத் தெற்கில் உள்ள முற்போக்குச் சக்திகள் முன்வருவார்களா, இனப் பிரச்சினை தொடர்பாக நல்ல விளைவுகள் உண்டாகும். அதனை முன்வந்து செய்பவர் யார்?

"வயிற்றை ஏதோ வந்து தாக்கியது"!

நல்லூர், ஏப். 29

அக்கம் பக்கங்களில் குண்டு வெடிப்புச் சத்தங்களும், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்ட பொழுது பயந்தோடி ஒடினேன் அப்போது எனது வயிற்றை ஏதோ ஒன்று தாக்கியது. குடல் வெளியே வந்தது!

கடந்த சனிக்கிழமை தொண்டமானாறு நிலையில் இடம் பெற்ற "ஷெல்" தாக்குதலின்போது காயமடைந்த சின்னட்டி நாகேசு (62 வயது) என்ற வயோதிபர் யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இவர் தனக்கு நடந்த சம்பவம் பற்றி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சனிக்கிழமை காலை பத்து மணியிருக்கும். நானும் வேறு சிலரும் தோட்டம் ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்தோம்.

அப்பொழுது எமது தோட்டத்தின் கற்றுப் புதர்களில் வெடிச் சத்தங்கள் கேட்டன.

நான் பயத்தினால் தோட்டத்தை விட்டு வெளியே ஓடினேன்.

அப்பொழுது வெடிச் சத்தம் ஒன்று கேட்டது எனது வயிற்றையும் ஏதோ ஒன்று தாக்கியது போல் இருந்தது.

வயிற்றின் வெளியே குடல் தள்ளிய நிலையில் வயிற்றை அமர்த்திப் பிடித்துக் கொண்டு வீட்டுக்கு ஓடினேன்.

இப்படி அவர் சொன்னார்.

ஐ. நா. பெரும் நிதி நெருக்கடியில்

இந்தியன் எக்ஸ்பிரஸ் புதிய ஆசிரியர்

புதுடில்லி, ஏப் 28

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளிதழின் பிரதம ஆசிரியராக திரு. கமலதேவ பதவி ஏற்றுள்ளார்

இதுவரை காலமும் 'இந்தியா ரூடே' யின் ஆசிரியராக திரு. தேவ பணிபாற்றி வந்தார்

பிரதமர் காந்தியின் நெருங்கிய சகா இவர்.

இவ்வளவு காலமும் பிரதம ஆசிரியராக திரு. ஜோர்ஜ் வர்கீஸ் இருந்து வந்தார்.

இவரின் காலத்தில் 'இந்தியன் எக்ஸ்பிரஸின்' ஆசிரியர் தலையங்கங்கள் டில்லி அரசுக்கு எதிராகவும் இலங்கைப் பிரச்சினையில் இலங்கை அரசுக்கு சாதகமாகவும் எழுதப்பட்டுவந்தன.

ஹெப்டியில் வன்செயல்

லண்டன், ஏப் 28

கரீபியன் குடியரசான ஹெய்டியில் வன்செயல்கள் வெடித்திருக்கின்றன.

நினைவாஞ்சலிப் பிரார்த்தனையில் கலந்து கொண்ட பொது மக்கள் மீது துருப்புக்கள் கட்டளை முன்று போர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

துருப்புக்கள் சுட்டகளேபரத்தில் மின்சார வயர்கள் அறுந்து வீழ்ந்ததால் வேறு மூவர் மின்சாரத்தாக்கு பலியானார்கள்.

இந்த ஆண்டு இறுதியில் வங்குரோத்து அடையலாம்

ஐ. நா. ஏப்ரல் 28

ஐ. நா. மோசமான நிதிநெருக்கடியில் சிக்கியுள்ளது.

உறுப்பு நாடுகள் அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடில் இந்த ஆண்டு இறுதியில் ஐ. நா. வை நடத்தப்பணம் இல்லாத நிலைமை ஏற்படும்.

இந்தநிலை எச்சரிக்கையை ஐ.நா. பொதுச் செயலாளர் விடுத்துள்ளார்.

நேற்று ஆரம்பமான ஐ.நா.பொதுச் சபையின் 40 ஆவது வருடாந்தக் கூட்டத்தில் பொதுச் செயலாளரின் அறிக்கை பரிசீலனை செய்யப்படவுள்ளது.

பதினெட்டு உறுப்பு நாடுகள் உறுதி அளித்தபடி பணத்தைச் செலுத்தாததே இந்த நிதி நெருக்கடிக்குக் காரணம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. சபை தனது நடவடிக்கைகளைச் செயல்படுத்த 10 கோடி டாலர் தேவைப்படுகின்றது.

உடனடியாக 6 கோடி டாலர்கள் கிடைத்தால் ஐ. நா. தனது செயல்பாடுகளை ஒரளவு தடையில்லாமல் இயங்க வைக்கக் கூடியதாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியிலிருந்து இடை நிறுத்தம்

புதுடில்லி, ஏப்ரல் 28

இந்தியாவின் முன்னாள் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி இந்திரா காங்கிரஸ் கட்சியிலிருந்து ஆறு வருட காலத்திற்கு இடை நிறுத்தி வைக்கப்பட்டார்.

வேறு முன்று முக்கிய தலைவர்களும் கட்சியிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக போதுச் செயலாளர் கருப்பையா மூப்பனார் இன்று அறிவித்தார்.

லிபியர்களுக்கு வெளியேற உத்தரவு

லண்டன், ஏப் 28

மே 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரிட்டனை விட்டு வெளியேறும்படி 300க்கு அதிகமான லிபிய மாணவர், பொறியியலாளர்கள், விமானிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தவறின் அவர்கள் நாடு கடத்தப்படுவர் என்றும் பிரிட்டன் அறிவித்துள்ளது.

அமெரிக்கா பாகிஸ்தான்

இராணுவ உதவி குறித்து பேச்சு

வாஷிங்டன், ஏப். 28

பாதுகாப்புக்கொள்கை, இராணுவ உதவி ஆகியன குறித்து அமெரிக்காவும் பாகிஸ்தானும் பேச்சுக்கள் நடத்தின.

இப்படி பென்டகன் அறிவித்துள்ளது.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் காஸ்பர் வீன்பெர்கர், பாகிஸ்தான் அமைச்சர் செயது இஜ்சால் செயிடி ஆகியோரே இப்பேச்சுக்களில் கலந்துகொண்டனர்.

கடந்தமாதம் அமெரிக்க காங்கிரசு 400 கோடி டாலர்களைப் பொருளாதார, ராணுவ உதவியாக பாகிஸ்தானுக்கு வழங்கத் தீர்மானித்தது தெரிந்ததே.

இதனிடையே பாகிஸ்தானுக்கு 2,000 ஏவாயுத எதிர்ப்புப் பீரங்கிகளை வழங்கும்படி அமெரிக்கப்பாதுகாப்பு அமைச்சு, காங்கிரஸுக்கு ஆலோசனை கூறியுள்ளது.

ஆசியாவின் அரசியல் நிலையை உறுதிப்படுத்தவும் பொருளாதாரத்தை முன்னேற்றவும் நட்பு நாடு ஒன்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இந்த இராணுவ உதவி அவசியம் என்று பென்டகன் அறிவித்துள்ளது.

ஜனாதிபதியுடன் பேச்சு

வாஷிங்டன், ஏப். 28

அமெரிக்காவுக்கான விசேஷ தூதர் பிலிப் ஹபிப், பெருநாட்டு ஜனாதிபதியுடன் மத்திய அமெரிக்க நிலைமை பற்றி பேச்சுக்கள் நடத்தினார்.

வெளி உலகில்

ஜிப்ரால்டர் தீவு

ஸ்பெயின் கோரிக்கையை பிரிட்டன் நிராகரித்தது

லண்டன், ஏப். 28

ஜிப்ரால்டர் தீவைத் திருப்பித் தரும்படி ஸ்பெயின் விடுத்த கோரிக்கையை பிரிட்டன் நிராகரித்துவிட்டது.

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கரட் தட்சர் இதனை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஸ்பெயின் மன்னர் ஜுவான் கார்லோஸ் ஜிப்ரால்டரைத் திருப்பித் தரும்படி கேட்டிருந்தார்.

இதுபற்றி பிரதமர் நாடாளுமன்றத்தில் மேலும் சொன்னதாவது:

ஜிப்ரால்டர் பற்றிய பிரிட்டிஷ் கொள்கையில் மாற்றம் இல்லை. ஜிப்ரால்டர் மக்களின் விருப்பத்துக்கு மாறாக பிரிட்டிஷ் அரசு செயல்படாது.

இப்படி பிரதமர் தட்சர் சொன்னார்.

இதற்குமுன்னர் ஸ்பெயின் மன்னர் ஜுவான் கார்லோஸ் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திலே பேச்சு அமைந்தது.

அமெரிக்காவினுள் நுழையத் தடை

வாஷிங்டன், ஏப். 29

ஐ. நா சபையின் முன்னாள் பொதுச் செயலாளர் கூர்ட் வால்ட்ஹெய்மை அமெரிகாவினுள் அனுமதிக்க வேண்டாம் என்று அமெரிக்க அரசுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க நீதித்துறை திணைக்களமே இச்சிபார்சுச் செய்தது.

இரண்டாவது உலக மகாயுத்தத்தில் ஜேர்மன் படையில் திரு. வால்ட்ஹெய்ம் சேர்ந்து பணிபாற்றினார் என்ற காரணத்துக்காகவே இத்தடை என்றும் தெரிய வருகிறது.

★ கிழக்கில்

வேளாண்மையில் ஈடுபட விவசாயிகள் அச்சம் தெரிவிப்பு

ஆயுதப் படையினரின் நடவடிக்கை காரணம்

மட்டக்களப்பு, ஏப். 29

கிழக்கு மாகாணத்திலுள்ள விவசாயிகள் ஆயுதப் படையினரின் நடவடிக்கைகளினால் வேளாண்மைச்செய்கையில் தொடர்ந்து ஈடுபடுவதா இல்லையா? என்ற இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கிறார்கள்.

கடந்த வருடம் பெரும் போக வேளாண்மைச் செய்கையில் ஒரு பகுதி இது வரை அறுவடை செய்யப்படவில்லை

அத்தோடு காலபோக

திருப்பலி பூசை

பருத்தித்துறை, ஏப். 29

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நோயாளர்கள், டாக்டர்கள், ஊழியர்கள் போன்றோர்களது நன்மை கருதி வைத்தியசாலையில் விரிவுரை மண்டபத்தில் சபை, ஞாயிற்றுக்கிழமைகளில் திருப்பலி பூசை ஒப்புக்கொடுக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

பருத்தித்துறை, கரவெட்டி கத்தோலிக்க பங்குக்குருவர்களினால் இது மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்வச்சந்நிதியில் பூசகர் நிர்வாணமாக சுட்டுக் கொலை!

சத்தியக்கடதாசியில் மற்றைய பூசகர்

யாழ்ப்பாணம், ஏப் 29

21 ம் திகதி செல்வச் சந்நிதி ஆலய வைரவரதத்தில் ஆயுதப்படையாரால் சுட்டுக்கொல்லப்பட்ட சின்னையா ஐயரின் கடைசி நிமிஷங்களை கண்ணால் கண்டவர் சம்பந்தமாக அரச அதிபருக்கு அனுப்பி வைத்த சத்தியக்கடதாசியிலேயே அவர் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

குபலாதனியிலிருந்து கொண்டுவரப்பட்ட அர்ச்சகர் உலரோடு இருக்கிறார் என்ற செய்தியில் வட்டமிட்டு சுட்டிக்காட்டப்பட்ட அர்ச்சகர் தரமே [illegible] வேளாண்மை செய்கைக்கு மாகாணத்தை பெரிதும் பாதிக்கும் எனவும்.

அதேநேரம் சுமார் ஒரு இலட்சம் ஏழை விவசாயிகளும் அவர்களது குடும்பத்தவர்களும் பட்டினிப் போராட்டம் நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படலாமெனவும் கருதப்படுகிறது.

ஆலய செய்திகளில்

திருவிளக்கு பூசை

சாவகச்சேரி, ஏப். 29

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் சித்திராபூரணையை யொட்டி பூரணைத் திருவிழாவும் திருவிளக்குப் பூசையும் நடைபெற்றன.

கமார் நூற்றுக்குமேலான பெண்களின் கலந்து கொண்ட தீப பூசையை சிவஸ்ரீ கே. பரராசசேகரக் குருக்கள் வழிநடத்தினார்.

பஞ்சகுண்டலாகம்

யாழ்ப்பாணம், ஏப் 29

கல்கைம் ஸ்ரீ கதிர்மலைச் சிவன் தேவஸ்தானத்தின் பஞ்சகுண்டலாகம் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை ஆரம்பமாகின்றது.

பஞ்சகுண்ட பக்ஷ உற்சவ யாகசாலையில் எக்ஷார்ச்சனை, லக்ஷ ஹோமம் ஆகியன இடம் பெறும்.

5 குண்டங்கள் அமைத்து 5 குருமார்கள் பூஜை, ஹோமம் நடத்துவர். 10 தினங்கள் 18 காலயாகபூஜைகள் இடம் பெறும்.

நாட்டில் அமைதியும் சாந்தியும் ஏற்படவும் [illegible] வேண்டி [illegible] பஞ்சகுண்டலாகம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நல்ல விமர்சனம் எழுத்தாளனை சிறந்த வழிகாட்டியாக்குகிறது

ஆகஸ்தியர் உரை

யாழ்ப்பாணம், ஏப். 29

எழுத்தாளனின் கருத்துக்கள் மக்கள் மத்தியில் விமர்சிக்கப்படும்போது மக்களுக்கும் எழுத்தாளனுக்குமிடையே இறுக்கமான பிணைப்பு ஏற்படுகின்றது. அவன் கருத்துகளை சொல்வதால் அவன் மக்களால் சாதகமாகவோ, பாதகமாகவோ விமர்சிக்க ஏதுவாகின்றான்.

இவ்வாறு ஆமையும் போது எழுத்தாளன் புடமிடப்படுகிறான் ஒரு நல்ல வழிகாட்டியாகத் திகழ்கின்றான்.

இப்படி பிரபல இரு கதை, நாவல் ஆசிரியர் திரு. ஆகஸ்தியர் தமக்கு ஆக்கோட்டை பொது நல அபிமானிகளால் கௌரவித்து அளிக்கப்பட்ட விருந்துபசாரவை பவத்தில் நன்றி தெரிவித்து கருத்துரை வழங்குகையில் கூறினார்.

திரு ந. அந்தோனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் திரு. ஆகஸ்தியர் மேலும் கூறியதாவது:

நல்லொருவனிடத்தும் ஒவ்வொரு வகையிலமைந்த திறமை இருக்கிறது. அந்தத் திறமைகள் மக்களுக்கு பயன்படத்தக்க வகையில் தெரிவிக்கப்படும்போது தான் உரிய நன்மை கிடைக்கின்றது.

மக்களிடம் உண்மையான பாசம், எழுத்தில் சத்திய வேட்கையும் ஒழுக்கமும் இருந்தாலேயே எழுத்தாளனின் இலக்கியங்கள் மக்களால் நேசிக்கப்பட்டு நிலைத்து நிற்கமுடியும். இவற்றைத் தவிர்த்த இலக்கியங்கள் போலியானவை.

எழுத்தாளன் மக்களால் உருவாக்கப்படுகின்றான். அவனது சிருஷ்டிகள் யாவும் மக்களுக்கேசொந்தமானவை.

இந்த வகையில் அவன் தனிமனித ஆதிக்கவாதிகளுக்காக மாறாதிரும் பேனா தூக்குவானாகில் அவனது இலக்கியங்கள் மக்களால் நிச்சயம் நிராகரிக்கப்படும்.

பாரதியார், புதுமைப்பித்தன், மார்க்சிம் கார்க்கி, லியோடால்ஸ்டாய், எமிலி ஸோலா ஆகிய இலக்கிய கர்த்தாக்களது இலக்கியங்கள் இன்றும் மக்கள் மத்தியில் நிலைத்து நிற்பதற்கு இது வே காரணம்.

தான் கொண்ட கருத்துக்களை எடுத்துச் சொல்லும் சுதந்திரம் எழுத்தாளனுக்கு உண்டு. அந்த சுதந்திரம் எந்த வகையிலும் பலாத்காரத்தினால் கையாளப்படுமாயின் அவனது சிருஷ்டித்தன்மை பாழாகி விடுகிறது.

வசைபாடுவதன் மூலம் இலக்கிய வளர்ச்சி ஏற்படுவிடாது. எந்த மாற்றுக்கருத்துள்ளவர்களுடனும் கருத்துப்பரிமாறுவதன் மூலமே ஒரு வித தெளிவு பிறக்கும். -இப்படி அவர் கூறினார்.

வண. பிதா இமானுவேல் அடிகளார், எழுத்தாளர் புத்தொளி, ஆசிரியை திருமதி செ. திரேசம்மா, திரு. எஸ். குணரத்தினம், வ. துரைராஜா, ஆன்னுயியார் க தம்பித்துரை, ஆசிரியர் ஜி வி இராதாகிருஷ்ணன், ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

விவசாயிகள் பாதிப்பு

கல்முனை, ஏப். 29

பொத்துவில் தொகுதியிலுள்ள கஞ்சிப்பொக்கணிக்குளம், ஆலையடிக்குளம், முன்மாரிக்குளம், முன்மாரிமுறிவு சோனக்குளம், பெரிய முருகந்தனைக்குளம், சின்னமுருகந்தனைக்குளம், ஆகிய பழமையாய்ந்த குளங்கள் 84 ஆம், 85 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் சேதமுற்று இருப்பதால் இக்குளங்களில் இருந்து நீர் பாய்ச்சி விவசாயம் செய்யும் ரகூயிக்கணக்கான விவசாயிகள் தற்போது விவசாயம் செய்ய முடியாது கலங்கியடைந்துள்ளனர்.

குளங்களுடன் சேர்ந்து பல ஆணைக்கட்டுகளும் சேதமடைந்துள்ளது. விவசாயிகளை மேலும் கவலையடையச் செய்துள்ளது.



சோம்யாதிமாரி

குறள்:

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்.

பொருள்:

நல்லொழுக்கம் இன்பமான நல்வாழ்க்கைக்குக் காரணமாக இருக்கும்; தீயொழுக்கம் எப்போதும் துன்பத்தைக் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கலர் பிலிம் சுருள்கள் கூடிய விரைவில் கழுவிக் (Proccessing & Printing) கொள்வதற்கு

ஞானம்ஸ் ஸ்ருடியோ

301, Clock Tower Road,
JAFFNA.

TPhone: 23067

உதயன்

29. 04. 1986 செவ்வாய்க்கிழமை

யாழ். நகரில் தரமான

போட்டோ ஸ்ரற் பிரதிக்கு

ஞானம்ஸ் ஸ்ருடியோ

301, Clock Tower Road,
JAFFNA.

T'Phone: 23067

தோழமை இயக்க போராளிகளுக்கு

ஈ. பி. ஆர். எல். எப். அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப்ரல்29

இம்மாதம் 24 ஆம் திகதி (வியாழன்) இலங்கைக் கடற்படையுடன் சமர்புரிந்து வீரமரணம் அடைந்த தோழமை இயக்கத்தைச் சேர்ந்த போராளிகளுக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வீர வணக்கம் தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த இழப்பில் துயர் உற்றிருக்கும் தமிழீழ விடுதலை இயக்கத் தோழர்களுடன் எமது சவல்லையை பகிர்ந்து கொள்கிறோம் – இப்படி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது அறிக்கையில் தெரிவித்து உள்ளது.

அணைக்கட்டுக்கு இரவு பகலாக காவல்

கொழும்பு, ஏப்ரல் 29

அண்மையில் தெற்கு இலங்கையில் திறந்து வைக்கப்பட்ட லுணுவெல் விசுர நீர்ப்பாசன அணைக்கட்டு இரவு பகலாக காவல் காக்கப்படுகிறது.

பொதுமக்களும் பொலீஸாரும் மாறி மாறிக் காவல் காத்து வருகின்றனர்.

சந்தளாய்க்குளத்தைக் கட்டு உடைப்பெடுத்ததொடர்ந்தே இக்காவல் பணி தொடங்கியது.

68 சடலங்கள் இதுவரை கண்டுபிடிப்பு

திருகோணமலை, ஏப். 29

சந்தளாய் அனர்த்தத்தில் இதுவரை 68 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

57 பேர் காணாமற் போய்விட்டனர் என்று சந்தளாய்ப் பொலீஸில் முறைப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையில் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு நிவாரண உதவிகள் குவிந்துகொண்டு இருக்கின்றன.

சமூகசேவைகள் அமைச்சர் அசோகா கருணாரத்ன நேற்றுச் சந்தளாய்க்கு விஜயம் செய்து அகதிகளைப் பார்வையிட்டார்.

அமிர் வெளிநாடு செல்வார்

பாண்டிச்சேரி, ஏப்ரல் 28

ஜூன், ஜூலை மாதங்களில் வெளிநாடு செல்ல இருப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணித் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் பாண்டிச்சேரியில் வைத்துச் சொன்னார்.

உலக நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து இலங்கைக்கு ஆயுத உதவி வழங்குவதை நிறுத்தும்படி தான் கேட்கப்போவதாகவும் திரு. அமிர்தலிங்கம் சொன்னார்.

செய்தியாளர்களிடம் இத்தகவல்களை திரு. அமிர்தலிங்கம் வெளியிட்டார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா உருவாக்கிய

பூதம் இன்று கட்டுப்பாட்டை மீறிவிட்டது

ஸ்ரீ சபாரத்தினம் கூறுகிறார்

சென்னை, ஏப்ரல் 29

ஜனாதிபதி ஜெயவர்த்தனா உருவாக்கிய பூதம் இன்று அவரின் கட்டுப்பாட்டை மீறிவிட்டது

தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவர் திரு ஸ்ரீசபாரத்தினம் இந்திய சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செய்தியாளர் கே. பி. களிடம் 'இல்லஸ்ரேட்டட் வீக்லி' சஞ்சிகைக்காக திரு. சபாரத்தினத்தை பேட்டி கண்டு இருந்தார்.

பேட்டியில் திரு. சபாரத்தினம் கூறியிருப்பதாவது:-

தமிழருக்குப் பாரபட்சம் காட்டப்படவில்லை என்று திரு ஜெயவர்த்தனா கூறுவது விசித்திரமான பொய் ஆகும்,

முழு உலகையும் ஏமாற்ற சோடிக்கப்பட்டது இது பிரிட்டிஷார் நாட்டைவிட்டு வெளியேறிய பின்னர்தான் பாரபட்சமே தொடங்கியது

முன்னாள் பொலீஸ் மா அதிபர் ஒரு தமிழர், சட்டமா அதிபர் தமிழர்கள் – இப்படி இந்த ஜெயவர்த்தனா கூறுகிறார். இவர்கள் வெறும் கண்காட்சி பொம்மைகளாவர்.

இவர்கள் நீங்களாக நீதி, நிர்வாக அமைப்புக்கள் பெரும்பான்மை இனத்தவராலேயே நிரப்பப்பட்டிருக்கின்றன.

சமீபகாலமாக தனது படையினரின் காட்டுமிராண்டித்தனமான அத்துமீறல்களை ஒப்புக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு திரு. ஜெயவர்த்தனா ஆளாகியிருக்கின்றார்.

அரச படைகளினால் போராளிகள் தரப்பில் இழப்புக்கள் ஏற்பட்டுள்ள என்றும் அரச பொதுசன தொடர்பு சாதனங்கள் கூறுகின்றன. இவை பொய்யானவை.

அரச படையினராக கொல்லப்பட்டவர்கள் முதியோர், குழந்தைகள், நோயாளிகள், கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோரே, வன்முறையைக் கையாளுபவர்கள் அரச படையினர், அவர்கள் வன்முறையைக் கைவிட்டால் நாங்கள் வன்முறையில் ஈடுபட நேரிடாது

இப்படி திரு ஸ்ரீ சபாரத்தினம் சொன்னார்.

ராஜீவ்-சிதம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கப்பட்டன.

வாய்மூலமான உறுதிமொழிகளை ஏற்றுக் கொள்ளும் காலம் போய்விட்டது என்பதை இலங்கை தரப்பினருக்கு உணர்த்தும்படியும் இந்தியக்குழுவுக்கு வலியுறுத்தி கூறப்பட்டுள்ளது.

அத்தோடு திரு. சிதம்பரத்தை திரு. பார்த்தசாரதியுக், திரு. வெங்கடேஸ்வரனும் நேற்று திங்கட்கிழமையும் சந்தித்து பல அறிவுறுத்தல்களை வழங்கினர்.

இதன்பின்னர் திரு. சிதம்பரம் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசினார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விஷயம் சம்பந்தமாக இருவரும் ஆராய்ந்தனர் என்று தெரிகிறது.

அரித்தமுள்ள அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமான நடைமுறைகள் குறித்து இச்சந்திப்பின்போது ஆராயப்பட்டதாகக் கூறப்படுகிறது.

திரு. சிதம்பரம் தலைமையான இந்தியக் குழு இன்று செவ்வாய்க்கிழமை (29-4-86) மாலை 6.40 மணி அளவில் கொழும்புக்கு வந்து சேரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைமன்னார்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

இடத்துக்கு விரைந்து வந்து பிரதேச வேட்டுக்களைத் தீர்த்தன.

தலைமன்னார் நோக்கி வந்த இரண்டு படகுகளும் பின்னர் மறைந்து விட்டன என்றும் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தின் பின்னர் தொடர்ந்து [illegible] ரோந்து சுற்றுகளை [illegible] ஈடுபடுத்தி [illegible] வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா உருவாக்கிய

30 சிங்கள தீவிரவாதிகள் மீது வழக்கு

வென்னப்புவையில் ஆயுதம் புதைத்து வைக்கத் திட்டமாம்

கொழும்பு, ஏப். 29

தமிழ்ப் போராளிகளுடன் இணைந்து செயற்பட்டதாக 30 சிங்களத் தீவிரவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்த 30 பேர் மீது விரைவில் வழக்குகள் தாக்கல் செய்யப்படும்.

இவர்களில் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் போதுச் செயலாளர் லயனல் போப்பாகே, மஹாரகம எம். பி திரு. தினேஷ் குணவர்த்தனவின் தம்பி திரு. இன்டிகா குணவர்த்தனா, பேராசிரியர் ஆனந்த லக்டி சில்வா ஆகியோர் அடங்குகின்றனர்.

இன்னும் 19 சிங்களத் தீவிரவாத இளைஞர்களைப் பொலீஸார் தேடி வருகின்றனர்.

வென்னப்புவையில் வெடிய காணி ஒன்றை வாங்கி, அங்கு ஆயுதங்களைப் புதைத்து வைக்கத் திட்டம் தீட்டியது

இந்தியாவில் இருந்து ஆயுதங்களைக் கடத்தி புத்தளத்துக்கு கொண்டு வந்து அங்கிருந்து வென்னப்புவைக் காணிக்குக் கொண்டுவரத் திட்டம் தீட்டியது -- ஆகிய திட்டங்களில் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே 30 பேரிலும் வழக்குகள் தாக்கல் செய்யப்படவிருப்பதாகச் சட்டமா திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பு மோதலில்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தூரப் பயணத்தை 45 மைல் தூரம் சவளக்கடை வழியாக கடந்து வந்து சேர்ந்தனர்.

பிற்பகல் 1.30 மணி அளவில் போராளிகள் இவர்களை எதிர்கொண்ட போது சண்டை மூண்டது.

டபிள்யூ. ஏ. விஜயரத்ன (வயது 27) என்ற சார்ஜண்ட் படுகாயம் அடைந்து ஹெலிக்கொப்டர் மூலம் கல்லடி இராணுவ முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸில் கொண்டு செல்லப்பட்டார். எனினும் இவர் பின்பு மரணம் அடைந்தார்.

இறந்த சார்ஜண்டின் சடலம் நேற்று விமானத்தில் அவரது சொந்த ஊரான தொம்பேக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

காயம் அடைந்த சிப்பாய்களில் ஒருவரான பீரிஸ் என்பவரும் அதே விமானத்தில் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

ஜனநாயக வழிகளில் உரிமை பெற முயன்று தமிழர் தோல்வி

அதன்விளைவே இன்றைய போராட்டம்

ஷெல்டன் ரணராஜா கூறுகிறார்

கொழும்பு, ஏப் 29

ஜனநாயக வழியில் சென்று உரிமைகளைப் பெற முயன்று தமிழர் தோல்வி கண்டனர் அதன் விளைவாக தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தி உரிமைப் போராட்டம் நடத்துகின்றனர்.

இப்படிச் சொன்னார் பிரஜா நீதி அமைச்சரும் செங்கடகல எம். பியுமான திரு. ஷெல்டன் ரணராஜா.

மத்திய மாகாண சமாதானக் குழுவின் ஆதரவில் இளைஞர்களுக்கு இடையில் சமாதானத்தை வளர்ப்பது எப்படி?' என்ற தலைப்பினான கருத்தரங்கில் பங்குபற்றிப் பேசுகையிலேயே மேற்கண்ட கருத்தை பிரதி அமைச்சர் வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:

பண்டா — செல்வா ஒப்பந்தத்தின் மூலம் ஏற்படவிருந்த பிரதேச நிர்வாகப் பரவலாக்கல் அமுலாக்கப்பட்டிருப்பின் இன்றைய இனப்பிரச்சினையே எழுந்திருக்காது

அரசியல் லாபம் கருதி யவர்களின் எதிர்ப்பினால் அந்த ஒப்பந்தம் இழித் தெறியப்பட்டது.

இதற்குப் பின்னர் தமிழர்கள் பல தரப்பாலும் புறக்கணிக்கப்பட்டே வந்தனர் இயல்புல் மனம் நொந்து சில தமிழ் மக்கள் ஆயுதமேந்தி உரிமைப் போராட்டம் நடத்துகின்றனர்.

தமிழர்தான் சிங்களவரை நம்ப வேண்டும் என்று எண்ணி நாம் செயல்படக்கூடாது. தமிழரை நம்பி சிங்களவர் நடக்கக் கூடாதா? தமிழரை நம்பி சிங்களவர் செயல்படவேண்டும்.

1977, 1983 வன்செயல்களில் அப்பாவித் தமிழ் மக்கள் தாக்கப்பட்டனர். இதற்காக சிங்கள மக்களின் சமாதானத் தூதுக் குழு ஒன்று வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்குச் சென்று தமிழ் மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும்.

இப்படி பிரதி அமைச்சர் ஷெல்டன் ரணராஜா சொன்னார்.

போராளிகளுக்கு...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

களுக்கு ஆயுதாபரணம் செலுத்தும் வகையில் கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டிருந்தன

வானங்களில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

எனினும் பஸ் போக்குவரத்து வழமைபோல் இருந்தது

குடாநாட்டின் மற்றைய இடங்களைப் போன்று நீர்வேலிப்பகுதியிலும் நேற்று வாழைகள் கட்டப்பட்டு தோரணங்கள் தொங்க விடப்பட்டன. கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன.

இன்றும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும் என்று நேற்று எதிர்பார்க்கப்பட்டது.

வர்த்தகர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சகல ஆட்சிக்குழு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

பொ. தெய்வேந்திரம், ஆ. செல்லையா, பொ. மதிமுகராசா, ம. கணேசன் ஆகியோரே கடத்தப்பட்ட வர்த்தகர்கள்.

ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் கடத்தப்பட்டவர்கள் விடுவிக்கப்படாவிடில் மாற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டியிருக்கும் என்றும் வர்த்தகர்கள் ஆட்சிக்குழு அறிக்கையில் கூறியுள்ளது.

கடற்படை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜா சூரியகுமார், கந்தையா குமாரவேலு, பொன்னம்பலம் குலசேகரம், ஞானப் பிரகாசம் அருந்தவராஜா, சித்தப்பு நியாகராஜா, அழகசாமி ரெங்கசாமி, கதிரவேற்பிள்ளை ஆனந்தராஜா, நாராயணன் ஞானசுந்தரி (பேபி) 33 வயது, வைத்திலிங்கம் இராமமூர்த்தி.

[illegible] நேற்றுக்கொப்டர் [illegible] ரோந்து சுற்றுகளை [illegible] ஈடுபடுத்தி [illegible] வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

ஊர்காவல் படை வீரர் இருவர் விளக்க மறியலில்

மட்டக்களப்பு, ஏப். 29

முஸ்லிம் ஊர்காவல் படை வீரர்கள் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தால் இரண்டு வார கால விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு பஸ் தொழிற்சங்க கூட்டுறவுச் சங்கத்தில் அண்மையில் நடந்த கொள்ளை தொடர்பாக இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

விளையாட்டரங்கு

லங்கா சிமெந்து வெற்றி

தேவா அபார ஆட்டம்

விளையாட்டுச் செய்தியாளர் சண். ஜோன்சன்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

யூனியன் கல்லூரி அணிக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் லங்கா சிமெந்து லிமிட்டட் அணி வெற்றி பெற்றது

யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் யூனியன் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது

இந்த அணி 43.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது

சுதன் 7 பவுண்டரிகள் அடங்கிய 43 ஓட்டங்களையும் சதாநந்தன் 41 ஓட்டங்களையும் ஆனந்தன் 30 ஓட்டங்களையும் ரஞ்சித் ஆட்டமிழக்காது 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சந்திரன் 3 விக்கெட்டுக்களையும் அறிவழகன் தேவாவந்தன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சிறிதரன் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

யூனியன் அணியின் 191 ஓட்டங்களுக்கு பதிலளித்தாடிய லங்கா சிமெந்து அணி 49.4 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களை பெற்றது.

அபாரமாக ஆடிய தேவாவந்தன் 74 ஓட்டங்களையும் (4 சிக்சர்கள், 7 பவுண்டரிகள்)

அறிவழகன் 43 ஓட்டங்களையும் உதயகுமார் 33 ஓட்டங்களையும் பெற்றனர்

கேதீசன், ரமணன் ஆகியோர் முறையே 4, 2 விக்கெட்டுக்களையும் பொன் விக்கினேஸ்வரன் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

சென்றலைட்ஸ் வெற்றிக் கிண்ணம்:

சில்வர் ஸ்ரார்ஸ் முன்னணியில்

யாழ்ப்பாணம், ஏப்.29

யாழ்ப்பாணம் சென்றலைட் விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இவ் வருடத்திற்கான ஆட்டங்களில் ஒரு ஆட்டத்தில் ஆகக் கூடுதலான புள்ளிகளான 8.2 புள்ளிகளைப்பெற்ற பெருமையை யாழ்ப்பாணம் சில்வர் ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் பொன் அணி பெறுகிறது.

சென்றலைட்ஸ் வெற்றிக் கிண்ணத்திற்காக சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் இப் போட்டி ஐந்தாவது வருடமாக நடைபெறுகிறது.

இதுவரை நடைபெற்று முடிந்த போட்டிகளின்படி கழக அணிகளின் நிலைகள் வருமாறு;

"ஏ" பிரிவு—சில்வர் ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக பொன் அணி 8.2 புள்ளிகள். கரவெட்டி துறை வொன் றெஸ்ட் அணி 3 புள்ளிகள். இவை இரண்டும் தலா ஒவ்வொரு போட்டியில் பங்கு பற்றியுள்ளன

"டி" பிரிவில்—இரண்டு ஆட்டங்களில் றெட்டமன்ட் அணி 7.8 புள்ளிகள் சில்வர் ஸ்ரார் நீல அணி ஒரு போட்டியில் 3.7 புள்ளிகள். சரச மோட்டை சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி ஒரு போட்டியில் 5.6 புள்ளிகள்.

"ஈ" பிரிவில் கல்லிகாடு யுனைட்டட் விளையாட்டுக்கழக அணி ஒரு ஆட்டத்தில் 5.9 புள்ளிகள் முஸ்லிம் விளையாட்டுக் கழக அணி ஒரு ஆட்டத்தில் 2.8 புள்ளிகள்.

"எச்" பிரிவில்—வைட் கோல்ட் ஸ்ரார் அணி ஒரு ஆட்டத்தில் 6.6 புள்ளிகள் யங்ஸ்ரார்ஸ் அணி ஒரு ஆட்டத்தில் 2.9 புள்ளிகள்

"ஜி" பிரிவில்—றிமோர்ஸ் விளையாட்டுக் கழக அணி இரண்டு ஆட்டங்களில் 8.1 புள்ளிகள். (இந்த அணி ஒரு ஆட்டத்தில் 8.1 புள்ளிகளை பெற்றது குறிப்பிடத்தக்கது) வளர்மதி அணி ஒரு ஆட்டத்தில் 5 புள்ளிகள் ரவி அணி ஒரு ஆட்டத்தில் 2 புள்ளிகள்.

"ஜே" பிரிவில்—பிறவுன்ஸ் அணி 3 ஆட்டங்களில் 17.3 புள்ளிகள் ஐடியல் அணி 3 ஆட்டங்களில் 15.1 புள்ளிகள் கலைமணி அணி 2 ஆட்டங்களில் 4.6 புள்ளிகள். விக்ரோறியன்ஸ் அணி இரண்டு ஆட்டங்களில் 1.7 புள்ளிகள்

2 மாவட்ட அமைச்சர்கள் மீது புகார்

கொழும்பு, ஏப்ரல் 29

இரண்டு மாவட்ட அமைச்சர்கள் உட்பட பல அரசியல்வாதிகள் மீதான முறைப்பாடுகள் விசேஷ ஜனாதிபதி ஆணைக் குழுவுக்குக் கிடைத்துள்ளன.

பொதுச் சேவையில் ஈடுபட்டுள்ள பிரமுகர்கள் மீதான ஊழல் மற்றும் ஒழுக்கீன நடவடிக்கைகளை விசாரிப்பதற்காகவே இந்த விசேஷ ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது

அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், கூட்டுத்தாபனத் தலைவர்கள் மீதான ஊழல், குற்றச் சாட்டுகள் ஆணைக்குழுவுக்கு தினமும் வந்து கொண்டிருப்பதாக ஆணைக்குழு வட்டாரங்கள் கூறின

கலா நிலையம்

மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை

நிலைய வெளி விழாவைப்பற்றிக் கலந்தாலோசிக்க, பழைய ஆசிரியர்களும் மாணவ மாணவிகளும், எதிர்வரும் 1-5-86 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு, கலாநிலையத்தில் தவறாது கூடும்படி வேண்டப்பெறுகின்றனர்.

க. கயிலாயநாதன்,
கலாநிலைய முதல்வர்

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு மாஸ்ரர்ஸ்பிரிண்ட் லிமிட்டெட், 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,3 ஆம் ஒழுங்கை மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

வெளியிட்ட திகதி 29-04-1986

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number Q J 60 N 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org